N - 27.12.2015



# மெய்யப்பன் பதிப்பகம்

தமிழ் இலக்கியங்களின் தாயகம்

நிறுவிய ஆண்டு : 2000

நிறுவனர் : பதிப்புச்செம்மல்

**ச. மெய்யப்பன்**

வெளியீடுகள் : 600

பரிசுபெற்ற நூல்கள் : 10

துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும்
நூல்களை வெளியிடுதல்


கிடைக்குமிடங்கள்

**மணிவாசகர் நூலகம்**

12–B, மேல சன்னதி, சிதம்பரம் – 608 001. ✆ : 04144 – 230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 108. ✆ : 044 – 25361039
6, சிவஞானம் தெரு, தி.நகர், சென்னை – 600 017. ✆ : 044 – 24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை – 625 001. ✆ : 0452 – 2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர் – 641 001. ✆ : 0422 – 2397155
296 / 134, செரி சாலை, சேலம் – 636 007. ✆ : 0427 – 4030709
28, நந்தி கோயில் தெரு, திருச்சி – 620 002. ✆ : 0431 – 2706450


தூது இலக்கியங்கள் - போ. சார்த்திரா

14

# தூது இலக்கியங்கள்

## தொகுதி - 2



மெய்யப்பன் பதிப்பகம்

பதிப்பாசிரியர்

போ. சார்த்திரா

## முன்னுரை

தமிழூரில் அமைந்துள்ள உலகத் தமிழ்க்கல்வி இயக்கம் தொடங்கப்பெற்று ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகி உள்ளன. ஆனால், 18 ஆண்டுகளாகக் கருத்தரங்கு நடை பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கருத்தரங்கிற்குத் தனித் தலைப்புகள் கொடுப்போம். சிலவேளைகளில் கட்டுரைகள் மிகுதியாக வந்தால் நான்கு தொகுதிகள் வரை வெளியிட்டுள்ளோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இருபதில் தடம் பதித்தோர் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தினோம். அதற்கு கட்டுரைகள் மிகுதியாக வந்ததால் நான்கு தொகுதிகள் வெளி யிட்டோம்.

எல்லா ஆண்டுகளிலும் நூல் உருவாக்கம் செய்து தருவது மணிவாசகர் பதிப்பகம் பெருமகன் பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பனார் அவர்கள் வாழ்கின்ற காலத்தில் பெரும்பாலும் தமிழூர் கருத்தரங்களுக்கு வருவார். இப்போது பெருமகனின் திருமகன் திருமிகு ச. மெ. மீனாட்சிசோமசுந்தரம் அவர்கள் தந்தையைப் போன்றே, எங்களுக்கு எல்லா நிலைகளிலும் உதவி செய்துவருகிறார். ஆண்டுதோறும் அவர் எத்தனை தொகுதிகள் வந்தாலும் வெளியிட்டு தருகிறார்.

தமிழின் பெருமையை உணர்த்தவேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வந்த, பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பனார் அவர்களின் கொள்கையை அவ்வாறே பின்பற்றி செயலாற்றி வருகின்றார் அவர் புதல்வர் திருமகன் சோமு. அதனை எங்களுக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகிறோம்.

இவ்வாண்டு தூது இலக்கியங்கள் பற்றிய தலைப்பில் கருத்தரங்கு நடத்துகிறோம். ஏறத்தாழ 108 கட்டுரைகள் வந்துள்ளன. பெரும்பாலும் மகளிர் கட்டுரைகள் தான் அதிகம். இவ்வாண்டு ஒரு மாணாக்கர் தனது ஆசிரியரைப் பற்றித் தமிழ் விடு தூது எழுதி அனுப்பியமை மிகுந்த பெருமைக்குரியது. நூல்களைப் பற்றி ஆய்வுசெய்வது மட்டுமில்லாமல், நூலையே உருவாக்கித் தருவது பெருமையுடையது.

அனைத்திற்கும் ஆணிவேராக அமையும் திருமிகு. இராம. குருமூர்த்தி அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களும்.

இரவுபகலாக கணினி செய்து உரிய காலத்தில் நூல்களை முடித்துதந்த நண்பர் தமிழூர் ஆறுமுகத்திற்கும், மெய்ப்புப் பார்த்துத் தந்த செல்வி ந. உமாதேவிக்கும், பலநிலைகளில் உதவிய திருமதி போ. கார்த்திகா ஆறுமுகத்திற்கும் மிக்க நன்றியும் வாழ்த்துக்களும்.

தமிழூர் — அன்பன்
*26.12.2015* — ச. வே. சு.

## உள்ளே


1. சிற்றிலக்கியத்தில் தூது – ப. செந்தில்நாயகம் – 8
2. திருவேங்கடநாதன் வண்டுவிடுதூதின் சிறப்புகள்– சி.சொர்ணமாலா – 17
3. மூவரையன் விறலி விடுதூது காட்டும் விளிம்புநிலை மகளிர் – அ. சேவியர் பிரின்சஸ் – 22
4. சிக்கல் தீர்க்கும் சிற்றிலக்கியம் – பி. தட்சிணாமூர்த்தி – 26
5. அழகர் கிள்ளைவிடுதூதில் புராணச்செய்திகள் – சி. தமயந்தி – 31
6. பக்தி இலக்கியத்தில் தூது – தமிழ்ச்செல்வி தினகரன் – 37
7. தமிழ்விடுதூதும் தேவாரமும் – ச. தனலெட்சுமி – 40
8. தூது இலக்கியத்தின் வித்தும் விழுதுகளும் – பி. தனலெட்சுமி – 45
9. மூவரையன் விறலி விடு தூது – ச. திருப்பதி – 51
10. அழகர் கிள்ளைவிடுதூதில் பக்திச் சிறப்புகள் – வெ. திலகம் – 59
11. அழகர் கிள்ளைவிடுதூதில் கிளியின் பெருமையும் தூதுரைக்கும் ஆற்றலும் – வே. தீனதயாளி – 65
12. சந்திரசேகரர் திருநீறுவிடுதூது – இரா. தேன்மொழி – 72
13. தென்றல் விடுதூது ஓர் ஆய்வு – ஜெ. நளினாதேவி – 79
14. நண்ணாவூர் சங்கமேஸ்வரி விறலிவிடு தூது ஒரு பார்வை – வெ.அ.நாகரத்தினம் – 85
15. வேங்கடசாமிரெட்டியாரின் நெஞ்சுவிடுதூது – செ. நாகஜோதி – 89
16. தமிழ்விடுதூது காட்டும் தொன்மங்கள் – ப. நித்யா – 99
17. இலக்கியத் தூதும், கிராமியத் தகவல் தொடர்பும் – நீலகண்டன் – 104
18. தமிழ்விடுதூதில் எண்கள் – ஜீ. பாண்டியலட்சுமி – 109
19. கலைஞர் மு. கருணாநிதி தோழி விடுதூது – மா. பாப்பா – 119
20. அழகர் கிள்ளைவிடுதூது விளம்பும் சிறப்புக்கூறுகள் – சு. பார்வதி – 125
21. தமிழ்விடுதூது இலக்கியத்தில் சைவம் – ஆ. பாலசரஸ்வதி – 133

பரந்தாமனார் தென்றல் விடுதூது

இரா.இளங்குமரன் அவர்களால் இயற்றப்பட்ட தூது இலக்கியம் 'பரந்தாமனார் தென்றல் விடு தூது' என்பதாகும்.

நூலமைப்பு

நாற்பத்து மூன்று கண்ணிகளாலாய தூதிலக்கியம் இது". இந்நூல் அளவிற்சிறியது வழக்கமான கலிவெண்பா யாப்பில் இது அமைந்திருப்பினும் தனிச் சொல் பயன்கொள்ளப்படவில்லை.

நூற்பொருள்

அ.கி.பரந்தாமனாரிடத்து நூலாசிரியர் இரா.இளங்குமரன் தென்றலைத் தூது போக்கி பாமாலை வாங்கி வரும்படிக் கூறுவதாக இப்பனுவலின் பாடுபொருள் அமைந்துள்ளது.

மயில் விடு தூது

கு.நடேச கவுண்டர் இயற்றிய தூது இலக்கியம் 'மயில் விடு தூதாகும்'.

நூலமைப்பு

முந்நூற்று தொண்ணூற்றெற கண்ணிகளால் ஆக்கப்பட்ட தூது இலக்கியம் 'பழனியாண்டாவர் மயில் விடு தூது' என்பதாகும். நூலின் முன்பாக விநாயகர் காப்பு, சற்குருநாதர் வணக்கம், வித்யாகுரு துதி என மூன்று வெண்பாக்களும் நூலின் பின்பாக இரு வெண்பாக்களும் அமைந்துள்ளன.

நூற்பொருள்

'பழனிமலையில் இருக்கும் முருகனைத் தொண்டன் துயர் நீக்க மயிலே விரைவில் அழைத்து வருக' எனும் பொருள் முறையில் இந்நூல் செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

அகப்பொருள் குறித்தே பெரும் பாலான தூது இலக்கியங்கள் தோன்றியுள்ளன. கம்பராமாயணம், கந்தபுராணம் போன்ற காப்பியங்களில் போர் குறித்த தூதுக்கள் பேசப்பட்டாலும், தனி நூலாக எழவில்லை. 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று தூது என்பதாகும். சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கலம்பக உறுப்புக்களில் ஒன்றாக அமைந்த மறம் என்பதில் தூது பற்றிய செய்தி வருகிறது. மன்னர்களின் காதல் கூறப்படுகிறது. தற்கால இலக்கிய தூதுக்களில் புலவர் ஆ.கணபதி, சாலை இளந்திரையன், இரா.இளங்குமரன், கு.நடேச கவுண்டர், ஆகியோர் இயற்றிய நூல்களில் பறவைகள் தூதுப் பொருள்களாக அமைந்துள்ளன. அஃறிணைப் பொருள்களே தூதுக்குரிய கருவிகளாக பயன்பட்டுள்ளன. புலவர்கள் தத்தம் கற்பனைக்கு ஏற்ப கவிநயம்பட யாவரும் படித்து இலக்கிய நயம் காணும் வகையில் தூது இலக்கியத்தைப் படைத்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டுச் சமுதாயத்தை வெளிப்படுத்தும் வண்ணம் சமுதாயச் செய்திகள் அமைய தூது இலக்கியங்களைத் தந்துள்ளனர்.



## திருவேங்கடநாதன் வண்டுவிடு தூதின் சிறப்புகள்

சி. சொர்ணமாலா

'பிரபந்தம்' என்று வழங்கப்பெறும் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்று கூறுவர். ஆனால் பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் நூல்களான பன்னிருபாட்டியல், வச்சணந்தி மாலை, நவநீதப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கம், பிரபந்த தீபிகை, தொன்னூல் விளக்கம், சதுரகராதி போன்றவற்றை நோக்குங்கால், பிரபந்தங்களின் எண்ணிக்கை சரியாக வரையறை செய்யப்படவில்லை. எனினும் இன்றும் பல இலக்கியங்கள் வழக்கில் உள்ளன; காலத்திற்கேற்ப புதுப்புது இலக்கியங்கள் தோன்றவும் செய்கின்றன. எனவே சிற்றிலக்கியங்களின் வகைகளை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது.

தூது

தமிழ்மொழியின்கண் நிறைந்துள்ள சிற்றிலக்கியங்களுள் தூது என்பதும் ஒன்று. இது 'மாலை வாங்கி வா', 'தூது சொல்லி வா', எனத் தலைவன்மேல் காதல் கொண்ட தலைவி, தன் காதல் துயரத்தை அஃறிணை அல்லது உயர்திணைப் பொருட்களிடம் எடுத்துக்கூறி, தூது விடுப்பதாகப் புலவர்களால் பாடப்பெறும். இவை கலிவெண்பாவால் அமையும். காதலன் தன் காதலிக்குத் தூது விடுப்பதைவிட காதலி காதலன்பால் விடுக்கும் தூது நூல்களே அதிகம்.

காமம் மிக்க கழிபடர் கிளவி

ஒருவரிடம் ஒரு பொருளைப் பெற்றுவரச் சொல்லியோ, ஒரு செய்தியைக்கூறி வருவதற்கோ மற்றொருவரை அனுப்புதல் தூது ஆகும். தூது என்பது 'செய்தி' 'செய்தி கூறுவோர்' என இரண்டையும் குறிக்கும். தூது உரைப்போன் 'தூதன்'. காதலர் பொருட்டுச் செல்லும் தூதினைத் தொல்காப்பியர் 'வாயில்', எனக்குறிப்பிடுகிறார். தலைவன் தலைவியர்க் காகத் தூது செல்லும் பெண்ணைத் 'தூதி' என்பர் (மு.சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வகைகள், ப. 48). அகவாழ்க்கை வாயில்களாகத் தொல்காப்பியம்.

முனைவர் சி. சொர்ணமாலா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 18.